# பனிமயம்




மார்ச் 2023

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை
ரூ. 5/-



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

மீண்டும் ஒரு தவக்காலத்தைத் தொடங்கியுள்ளோம். தவக்காலம் என்பது மனந்திரும்புவதற்கான ஒரு காலம். எனவே, மனத் துயரும், மகிழ்ச்சியும் கலந்த காலம்.

காலத்தின் சிறப்பை சபை உரையாளர் தமது நூலில் நன்றாகப் பதிவு செய்துள்ளார். “தேடிச் சேர்ப்பதற்கு ஒரு காலம், இழப்பதற்கு ஒரு காலம்; காக்க ஒரு காலம், தூக்கியெறிய ஒரு காலம்; கிழிப்பதற்கு ஒரு காலம், தைப்பதற்கு ஒரு காலம்; பேசுவதற்கு ஒரு காலம், பேசாதிருப்பதற்கு ஒரு காலம்; அன்புக்கு ஒரு காலம், வெறுப்புக்கு ஒரு காலம்; போருக்கு ஒரு காலம், அமைதிக்கு ஒரு காலம்” (சஉ 3:6-8) என்று அருமையாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே, நமக்கு இத்தவக்காலம் இன்பங்களை, தன்னலத்தை இழக்கின்ற காலமாக, தேவையற்ற சொற்களைப் பேசாதிருக்கும் காலமாக, வெறுப்பையும், போரையும் களைந்து, அன்பும், அமைதியும் ஆற்றும் காலமாக அமைய நாம் முயற்சி எடுப்போமாக. இறையருள் வேண்டுவோமாக.

மேலும், இத்தவக்காலத்தின் செபம், தவம், அன்புச் செயல்கள் அனைத்தையும் நமது தங்கத் தேர்த் திருப்பணிகளின் ஆசிகளுக்காகவும், பெருவிழாவின் நன்மைகளுக்காகவும் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

“இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பு நாள்” (2 கொரி 6:2) என்ற பவுலடியாரின் வாக்கிற்கிணங்க, இந்நாள்கள் நமக்கு மீட்பின் நாள்களாக அமைவதாக.

நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் ஆசியால் நிரப்புவாராக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 23 தாரகை 7

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### முறைகேடுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக...

திருஅவையின் உறுப்பினர்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வலி மற்றும் துன்பத்திற்கு திருஅவைக்குள்ளேயே ஓர் உறுதியான பதிலைப் பெறும்படியாக நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. அர்ஜென்டினாவின் சான் நிக்கொலாஸ் திருத்தலம்! ......4
அருள் மரி வேந்தன்

2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்.........6
செல்வராஜ் மிராந்தா

3. மரியன்னையின் முன்னோடிகள் - அறிமுகம்..................8
அருள்பணி. குமார்ராஜா

4. பனிமய சாட்சியங்கள்..........11

5. பனிமயம் - மீள் பார்வை ..........12
கலாபன் வாஸ்

6. பனிமய அன்னை : பனிமயம் பாடும் பாவலர்கள் ..........14
தி. சொர்ணராஜன் விக்டோரியா

7. தவக்காலம் 2023 திருநிகழ்வுகள்..........15

8. நம் திருஅவை, நமது பெருமை திருத்தந்தையர்!..........16

9. விவிலியப் போட்டி ..........18

10. மாதம் ஒரு மாதா படம் ..........21

11. பனிமயப் பகிர்வு..........22

புதிய காட்சிகள்: 4

மரியன்னை மலர்கள்: 8

# அர்ஜென்டினாவின் சான் நிக்கொலாஸ் திருத்தலம்!



கிளாடிஸ் என்னும் 46 வயது (பிறப்பு 1937) பெண்மணிக்குத் திருமணமாகி இரு மகள்கள் உள்ளனர். அவர்களுக்குத் திருமணமாகிக் குழந்தைகளும் உள்ளனர். எனவே, கிளாடிஸ் ஒரு பாட்டியும்கூட. அதிகமாகப் படிக்கவில்லை. ஆனால், இறைபக்தி மிக்கவர். 1976ஆம் ஆண்டில் ஓர் அறுவை சிகிச்சையால் உயிர் தப்பியவர். எனவே, அன்னை மரியாவுக்கு நன்றியாக லுஜான் மரியன்னைத் திருத்தலத்துக்கு 5 ஆண்டுகள் தொடர்ந்து வருவதாக நேர்ச்சை செய்து அதை நிறைவேற்றியவர்.

அர்ஜென்டினா நாட்டின் தலைநகர் புவனஸ் அய்ரஸ் நகரிலிருந்து 230 கி.மீ. தொலைவிலுள்ள சான் நிக்கொலாஸ் என்னும் நகரில் வாழ்ந்த எளிய பெண்மணிதான் இந்த கிளாடிஸ். இவருடைய வாழ்வில் திருப்புமுனை நிகழ்வு ஒன்று 1983ஆம் ஆண்டு செப்டம்பர் 25 அன்று நிகழ்ந்தது. இந்த நிகழ்வு தன் வாழ்வை மட்டுமல்ல, அந்த நகரின் வாழ்வையே மாற்றப்போகிறது என்பது அன்று அவருக்குத் தெரியவில்லை.

முந்தின நாள் குடும்ப செபம் செபிப்பதற்காகத் தன் செபமாலையை எடுக்கச் சென்றபோது, அது பளிச் என்று ஒளிவீசியதைக் கண்டு வியந்தார். மற்றவர்களும் அதைப் பார்த்தனர். இணைந்து செபமாலை செபித்தனர். மறுநாள் (செப்டம்பர் 25) கிளாடிஸ் செபமாலை செபித்துக் கொண்டிருக்கும்போது நீல நிற உடையில், குழந்தை இயேசுவைக் கையில் தாங்கியவாறு அன்னை மரியா காட்சி தந்தார். ஆனால், ஒன்றும் பேசவில்லை. அன்னையைக் காட்சியில் கண்ட கிளாடிஸ் திக்குமுக்காடிப் போனார். ஆனால், யாரிடமும் சொல்லவில்லை. இப்படி ஐந்து நாள்கள் அன்னையைக் காட்சியில் கண்டார். அக்டோபர் 13 (பாத்திமா காட்சியின் நினைவு நாள்) அன்று ஆறாவது முறையாக அன்னை காட்சியளித்தபோது அன்னை முதன்முதலாகப் பேசினார். "நீ நம்பிக்கைக்குரியவளாய் இருந்துள்ளாய். அஞ்சாதே. நீ என்னுடன் நெடுந்தூரம் பயணம் செய்யவேண்டும்" என்பதுதான் அன்னையின் முதல் செய்தி.

தொடர்ந்து, விவிலியத்தைப் புரட்டி இறைவாக்கினர் எசேக்கியேல் 2:4-10 இறைவாக்குகளை வாசிக்கச் சொன்னார் அன்னை. எசேக்கியேலைக் கடவுள் அனுப்பி

இறைவாக்கு உரைக்கச் சொல்லும் அந்தப் பகுதி கிளாடிசின் எதிர்காலத்தை முன்னுரைத்தது.

மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று அஞ்சிய கிளாடிஸ் இந்தக் காட்சிகளைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லை. பல காட்சிகளுக்குப் பிறகு சான் நிக்கோலாஸ் கத்தீட்ரல் பங்குத் தந்தையான அருள்தந்தை கார்லோஸ் பெரசிடம் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அவருக்கு செவிமடுத்த தந்தை கார்லோஸ் தொடர்ந்து செபிக்க அவரை ஊக்கப்படுத்தினார்.

காட்சிகள் தொடர்ந்தன. லூர்து, பாத்திமா போன்ற காட்சித் தலங்களில் சொன்னது போலவே, இங்கும் அன்னை மரியா மனமாற்றம், செபம், தவம், நற்கருணை பக்தி, செபமாலை செபித்தல், மரியாயின் மாசற்ற இதயத்துக்கு ஒப்புக்கொடுத்தல் போன்றவற்றையே செய்தியாகத் தந்தார். கிளாடிஸ் அதிகமாகப் படித்திருக்கவில்லை. இருப்பினும், ஆன்மீக இயக்குநர் தந்தை கார்லோசின் வழிநடத்துதலில், தான் பெற்ற செய்திகளையெல்லாம் ஒரு குறிப்பேட்டில் எழுதி வந்தார் கிளாடிஸ்.

அன்னையின் வேண்டுகோளின்படி 1989ஆம் ஆண்டு அன்னையே குறிப்பிட்டுச் சொன்ன இடத்தில் கோவில் ஒன்று கட்டப்பட்டது. அன்னை மரியா நின்று கொண்டே செபமாலையை வழங்குவது போன்ற அன்னையின் திருவுருவம் நிறுவப்பட்டது. ஏராளமான மக்கள் அங்கு வந்து அன்னையைக் கண்டு மன்றாடினர். புதுமைகள் நிகழ்ந்தன. குறிப்பாக, மூளைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு சிறுவன் குணமடைந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தொடர்ந்து, 1990 அக்டோபர் 13 வரை அன்னையின் காட்சிகள் தொடர்ந்தன. இதற்கிடையில் கிளாடிசுக்கு ஐந்து காய வரமும் கிடைக்கப்பெற்றது. கை, கால், தோளில் காயங்கள் தோன்றி மறைந்தன. இயேசுவின் பாடுகளில் அவரும் பங்குபெற்றார்.



கொஞ்சம் கொஞ்சமாக சான் நிக்கோலாஸ் திருத்தலம் அர்ஜென்டினாவின் பிரபலமான மரியன்னைத் திருத்தலமாக மாறியது. கிளாடிஸ் முதன் முதலாக அன்னையைக் காட்சியில் கண்ட செப்டம்பர் 25ஆம் நாளே இத்திருத்தலத்தின் விழா நாளாக மாறியது. 1990ஆம் ஆண்டு 60 ஆயிரம் குருக்கள் திருப்பயணமாக வந்து அன்னையைத் தரிசித்தபோது, உலகம் முழுவதும் இத்திருத்தலம் புகழ் பெற்றது. 2013ஆம் ஆண்டு அன்னை காட்சியளித்த 30ஆம் ஆண்டு விழாவின்போது ஐந்து இலட்சம் திருப்பயணிகள் கலந்து சாதனை படைத்தனர்.

இருப்பினும், திருஅவையின் அதிகாரப் பூர்வமான ஏற்பிசைவு கிடைக்கவில்லை. காட்சிகள், அதன் செய்திகள், புதுமைகள், கிளாடிசின் வாழ்வு ஆகியவற்றை நன்கு ஆய்வு செய்தபின், 2016ஆம் ஆண்டு சான் நிக்கொலாஸ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹெக்டரால் மரியன்னைக் காட்சிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இன்று சான் நிக்கொலாஸ் திருஅவையால் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒரு மரியன்னைக் காட்சித் திருத்தலம் என்று பெருமை கொள்கிறது. நம் அன்னை தொடர்ந்து தம்மை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். நாம் அவரது குரலுக்கு செவி மடுக்கிறோமா?

**அருள் மரி வேந்தன்**

22



# பனிமய அன்னை பேராலய

## மலரும் நினைவுகள்...

அருள்திரு. இரத்தினாஜ் அடிகளார் 2004 ஆம் ஆண்டு மாற்றலாகச் சென்ற பிறகு அருள்திரு. ஜெரோசின் அ. கற்றார் அவர்கள் பரிசுத்த பனிமய அன்னையின் பேராலய அதிபராகவும் பங்குத் தந்தையாகவும் பொறுப்பேற்றார்கள். 2004 முதல் 2009 வரையிலான ஐந்தாண்டுகால அவருடைய அருள்பணியின்போது பங்கின் இளைஞர்களின் எழுச்சியைக் காண முடிந்தது. எப்போதும் பேராலய பங்கு அலுவலகத்தில் இளைஞர்களின் பங்களிப்பைக் காணும் முதியோர் பலர் அதை ஒரு மறுமலர்ச்சியின் காலமாகவே கருதினர்; காரணம் நவீன கால மாற்றங்களால் ஏற்பட்ட சிந்தனை வேறுபாடுகளில் சிக்கி மத உணர்வுகளும் பக்தி முயற்சிகளும் மழுங்கடிக்கப்படும் சூழலில் இளைஞர்களின் மாறுபட்ட செயல்பாடுகள் ஆச்சரியத்தைக் கொடுத்ததுபோலும்.



இளமையின் பூரிப்பில் எழும் ஆசாபாசங்கள் தினவெடுக்கும் உடல்வலிமையால் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகள் ஆகியவற்றை ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு இளைஞர்களை ஆற்றுப்படுத்துவதில் அயராது கவனம் செலுத்திய அருள்தந்தை ஜெரோசின் அ. கற்றாரை சுற்றி எப்போதும் இளைஞர் பட்டாளம் இருந்தது. பங்கு நிர்வாகத்தில் பல துறைகளில் இளைஞர்கள் அவருக்குப் பக்கத் துணையாக நின்றனர். கிறிஸ்து பிறப்பு நாட்களிலும் அன்னையின் திருவிழா நாட்களிலும் பல கலை நிகழ்ச்சிகளை நடத்த ஊக்குவித்தார். ஆலயத்தையும் ஆலய வளாகத்தையும் பராமரிப்பதிலும் இளைஞர்கள் பங்காற்றினர்.

அருள்தந்தை அலங்காரம் அடிகளாரின் காலத்தில் 1944/45களில் போடப்பட்ட மொசைக் தரை பழுதுபட்டிருப்பதைக் கண்ட அருள்தந்தை ஜெரோசின் ஆலயத்தின் தரை முழுவதையும் பளிங்கு (Marble) கற்களால் மாற்றியமைத்தார். அதற்காக ஓரிரு முறை திருநெல்வேலிக்கு சென்று பளிங்குக் கற்களை அவரே தேர்வு செய்து தூத்துக்குடிக்கு கொண்டு வந்தபோது இளைஞர்களே அவற்றையெல்லாம் இறக்கி வைத்தனர். ஆலயத்தின் தரைப் பரப்பளவு முழுவதும் தூயகம் உட்பட அனைத்து இடங்களிலும் பளிங்குக் கற்கள் பாவப்பட்டன. இளைஞர்கள் பொறியாளர்களோடு இணைந்து பணியாற்றினர்.

ஆலயத்திற்கு முன்பு கொடிமரம் இருக்கும் நிலம் பழைய துறைமுகத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததை கேப்டன் சிவராமன் போர்ட் ஆபீசராக இருந்த காலத்தில் அந்த இடத்தை நீங்கலாக விட்டு மதில் எழுப்பி கோயில் பயன்பாடு தடைபடாமல் இருக்குமாறு செய்திருந்தார். அரசு நில அளவை நிர்வாகம் அதற்கு சொந்தம் கொண்டாடத் தொடங்கியது. அருள்தந்தை காலத்தில் அது ஒரு சமரச தீர்வுக்கு வந்து இன்றுவரை கோயிலுக்கு அனுபவ பாத்தியப்பட்டதாக இருக்கிறது.

அந்த இடத்தின் வடக்கு பாகத்தில் ஆலயத்தை தரிசிக்க வரும் வெளியூர் திருப்பயணிகள் சிறிது ஓய்வெடுத்துச் செல்லும் வசதிக்காக ஒரு விடுதியும் அதோடு சேர்ந்தாற்போல் பீச் ரோடு என்ற பெயரில் கடைகளும் கட்டிமுடித்தார்.

அருள்தந்தை அலங்காரம் அடிகளார் காலத்தில் ஏழை இளம் பெண்கள் பயன்பெறும் நோக்கத்தோடு இராட்டைக் கழகம் ஒன்றை தொடங்க தீர்மானித்தார். அதற்காக சிலுவைக் கோயிலை ஒட்டினாற்போல் கோயிலுக்குச் சொந்தமாக வடக்கு பக்கமிருந்த காலி நிலத்தில் ஓடுகளால் வேயப்பட்ட ஒரு மண்டபம் கட்டி இராட்டைக் கழகம் ஒன்றை நடத்தி வந்தார். பிற்காலத்தில் 'அம்பர் சக்ரா' வந்தபோது அது Hall sixty என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. பழைய இராட்டைக் கழகமிருந்த இடம் அதிக பயன்பாடற்ற நிலையிலிருப்பதைக் கண்ட ஜெரோசின் அடிகளார், இத்தாலியில் இருந்தபோது பரிச்சயப்பட்ட உபகாரி ஒருவரின் ஒத்துழைப்பு ஆதரவோடு மாடியில் ஒரு சிறு கலியாண மண்டபமும் கீழ்த்தளத்தில் ஒரு உணவு உண்ணும் மண்டபமும் கட்டிமுடித்தார்கள். நடுத்தர மக்களின் பயன்பாட்டுக்கு இன்று அது உபயோகப்படுகிறது. பல திருமண வரவேற்புகளும் புதுநன்மை வரவேற்புகளும் இன்று அதில் நடந்து கொண்டிருக்கிறது.

அருள்தந்தை ஜோப் டி ரோஸ் 1977 தேர்த்திருவிழாவில் கிடைத்த மீதத் தொகையில் தஸ்நேவிஸ் மாதா பெயரில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கூடம் தொடங்க நினைத்தார்கள். அதற்காக அருகிலிருந்த மிலிக்கன் ஆபீஸ், பேலிங்பிரஸ், கோடவுன் காலி நிலம் அடங்கிய விசாலமான இடத்தை விலைபேசியதில் நிர்ணயிக்கப்பட்ட விலை கையிருப்புத் தொகையை விட சிறிது கூடுதலாக இருந்ததால் பண உதவிக்காக மறைமாவட்டத்தை அணுக, அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மறைமாவட்டமே அதை வாங்கி Snow Hallலும் சில கடைகளும் கட்டிவிட்டது. எப்படியோ தான் எடுத்த முயற்சியை நிறைவேற்ற கன்னியர் மடக் கட்டிடத்திலேயே தஸ்நேவிஸ் மாதா பெண்கள் உயர்நிலைப்பள்ளியை துவக்கினார்கள். அதைக் கேள்விப்பட்ட அருள்திரு ஜெரோசின் அடிகளார், ஜார்ஜ் ரோடு பகுதியில் உள்ள உபயோகிப்பாரற்றுக் கிடந்த கோடவுன்களை கேட்டு மறைமாவட்டத்திடம் விண்ணப்பித்தார். சிறு போராட்டத்துக்குப் பின் அந்த இடத்தில் எஸ்கலின் திருப்பயணிகள் விடுதி சகல வசதிகளுடன் கட்டி முடித்தார்.

2004 முதல் 2009 வரையிலான தனது காலத்தில் ஜெரோசின் அடிகளார் ஆலயத்தில் பளிங்குத் தளம் அமைத்து, ' விடுதி, சிலுவைக் கோயில் கல்யாண மண்டபம், எஸ்கலின் திருப்பயணியர் விடுதி என பல கட்டிடங்களைக் கட்டி முடித்தார். இளைஞர்களின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்தார்.

அத்தனை பணிகளுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தது போல் 2007ஆம் ஆண்டு பரிசுத்த பனிமய அன்னையின் தங்கத்தேர் பவனியை வெகு ஆடம்பரமாகக் கொண்டாடி அனைவரின் வெகுமதிப்பையும் பெற்றார். அவர் ஒரு செயல் வீரர் என்பதை எழுதித்தான் தெரியவேண்டியது ஒன்று அல்ல...! காரணம் அவர் ஒரு ஆற்றலின் ஆளுமை!



**செல்வராஜ் மிராந்தா**

மரியன்னையின் முன்னோடிகள்: 1

# மரியன்னையின் முன்னோடிகள்

## அறிமுகம்

விவிலியத்தில் முன்னோடி என்பது ஓர் அடையாளம். ஆண்டவர் இயேசுவின் முன்னோடிகளாகப் பழைய ஏற்பாட்டில் பலரைச் சொல்லலாம். ஆதாம், மோசே, தாவீது, சாலமோன், இறைவாக்கினர் யோனா ஆகியோர் இயேசுவின் முன்னோடிகள் என்பது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

இயேசுவே மறைநூல் (பழைய ஏற்பாடு) தனக்குச் சான்று பகர்வதாகச் சொன்னார். “மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என எண்ணி அதனைத் துருவித் துருவி ஆய்ந்து பார்க்கிறீர்களே, அம்மறைநூலும் எனக்குச் சான்று பகர்கிறது” (யோவா 5:39) என்று மறைநூல் அறிஞர்களிடமும், பரிசேயர்களிடமும் சொன்னார் இயேசு.

அவரே பழைய ஏற்பாட்டின் ஒரு சிலரைத் தன் முன்னோடிகளாக அறிவித்தார். எடுத்துக்காட்டாக, “யோனா மூன்று பகலும் மூன்று இரவும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தார். அவ்வாறே, மானிட மகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார்” (மத் 12:40) என்று சொன்னதன் வழியாக, யோனாவைத் தன் முன்னோடியாக்கினார்.

பழைய ஏற்பாட்டின் முன்னோடிகள் மனிதர்களாக மட்டுமல்ல, நிகழ்வுகளாகவும் நிறுவனங்களாகவும் இருக்கலாம் என்கின்றனர் விவிலிய அறிஞர்கள். எடுத்துக்காட்டாக, எருசலேம் கோவில் இயேசுவுக்கு முன் அடையாளமாக இருக்கிறது. எனவேதான், இயேசு “இக்கோவிலை இடித்துவிடுங்கள். நான் மூன்று நாளில் அதைக் கட்டி எழுப்புவேன்” (யோவா 2:19) என்றார்.

அவ்வாறே, பழைய பாஸ்கா நிகழ்வு இயேசுவின் புதிய பாஸ்கா நிகழ்வுக்கு முன்னோடியாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

இயேசுவுக்கு அடுத்தபடியாக அன்னை மரியாவுக்குப் பழைய ஏற்பாட்டில் ஏராளம் முன்னோடிகளைக் காண்கிறோம். இந்த முன்னோடிகளெல்லாம் இறைத் திட்டத்தின்படியே வாழ்ந்து, மீட்பின் வரலாற்றில் தங்களின் பங்களிப்பை நிறைவாக ஆற்றியுள்ளனர். பழைய ஏற்பாட்டைக் கூர்ந்து ஆய்வு செய்தால், அந்நூலின் புகழ்பெற்ற பெண்டிர் அனைவருமே ஏதோ ஒரு விதத்தில் அன்னை மரியாவின் முன்னோடியாகச் செயல்பட்டிருக்கின்றனர் என்பதை அறிந்து வியக்கிறோம். உண்மையில், அதுவே கடவுளின் திட்டம் என்பதை உணரும்போது நம் வியப்பு உயர்கிறது. நம் மனம் ஆண்டவரைப் போற்றுகிறது.

### முன்னோடி 1 :
### ஏவாள்

விவிலியத்தின் முதல் பெண்ணான ஏவாள்தான் மரியன்னையின் முதல் முன்னோடி என்பது சிலருக்கு வியப்பாக இருக்கலாம், பலரும் அதை ஏற்கனவே அறிந்திருக்கலாம். ஆம், திருஅவையின் தொடக்க காலத்திலிருந்தே ஏவாளுக்கும், அன்னை மரியாவுக்கும் இருந்த ஒற்றுமை - வேற்றுமைகளைத் திருஅவைத் தந்தையர் நன்கு அறிந்திருந்தனர். இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித ஐரனேயஸ் அன்னை மரியாவைப் “புதிய ஏவாள்” என்று அழைத்தார் என்பது வரலாறு.



பவுல் உரோமையருக்கு எழுதிய திருமடலின் ஐந்தாம் அதிகாரத்தைப் பின்பற்றி, இயேசு "புதிய ஆதாம்" என நிறுவினார் ஐரனேயஸ். "ஒரு மனிதன் (ஆதாம்) வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது" (உரோ 5:12). "ஒருவரின் (இயேசு) கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்" (உரோ 5:19). "இந்த ஆதாம் வரவிருக்கிறவருக்கு (இயேசு) முன்னடையாளமாய் இருக்கிறார்" (உரோ 5:14) என்று பவுல் தமது கிறிஸ்தியல் உண்மைகளைப் பதிவுசெய்துள்ளார்.

இந்த இறையியல் செய்தியைப் பின்புலமாகக் கொண்டு, "தப்பறைகளுக்கு எதிராக" என்னும் தமது நூலில் ஏவாளுக்கும், மரியாவுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விவரிக்கிறார் புனித ஐரனேயஸ். ஏவாளின் கீழ்ப்படியாமையால் பாவம் நுழைந்தது என்றும், மரியாவின் கீழ்ப்படிதலால் அவருக்கும், மனுக் குலத்திற்கும் மீட்பு கிடைத்தது என்றும் இன்று நாம் பேசுகின்ற மரியியல் செய்தியை முதன் முதலில் ஐரனேயஸ்தான் எழுதினார்.

இந்தப் பின்னணியில் விவிலியத்தை நாம் ஆய்வு செய்கிறபோது, ஏவா மரியன்னையின் முதல் முன்னோடி என்பதற்கான ஆதாரங்களைக் காண்கிறோம்.

**1. அனைவருக்கும் தாய்.** "மனிதன் தன் மனைவிக்கு "ஏவாள்" என்று பெயரிட்டான். ஏனெனில் **உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய்**" (தொநூ 3:20) என்கிறது தொடக்க நூல். உயிரியல் அடிப்படையில் ஏவாள் நம் அனைவருக்கும் தாய் என்றால், மீட்பின் அடிப்படையில் மரியா அனைவருக்கும் தாய் என்பது

உண்மையல்லவா? இயேசு சிலுவையில் தொங்கியபோது யோவானிடம் "இவரே உம் **தாய்**" என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" (யோவா 19:27). இயேசுவின் உயிர்ப்புக்குப் பின்னர் சீடர்கள் "அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய **தாய் மரியாவோடும்** இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்" (திப 1:14) என்னும் செய்தி இந்த உறவை உறுதிப்படுத்துகிறது.

**2. துணையும், ஆதரவும்.** முதல் ஆதாமுக்கு ஏவாள் துணையும் ஆதரவுமாய் இருந்தார் என்பதை "நீர் ஆதாமைப் படைத்தீர்; அவருடைய மனைவி ஏவாளை அவருக்குத் **துணையாகவும் ஆதரவாகவும்** உண்டாக்கினீர். அவர்கள் இருவரிடமிருந்தும் மனித இனம் தோன்றியது" (தோபி 8:6) என்னும் இறைமொழியிலிருந்து அறிகிறோம். இதன் தொடர்ச்சியாக, புதிய ஆதாமான இயேசுவின் மீட்புப் பணியில் மரியா துணையாகவும், ஆதரவாகவும் இருந்தார். அவர்கள் இருவரிடமிருந்தும் இறைமக்கள் என்னும் புதிய இனம் தோன்றியது.

**3. பாம்பால் வீழ்ச்சியும், பாம்பை வீழ்த்துதலும்.** மேற்சொன்ன இரண்டும் ஏவாளுக்கும், மரியாவுக்கும் உள்ள ஒற்றுமைகள். இருவருக்கும் உள்ள வேற்றுமையின் அடிப்படையிலும், ஏவாள் மரியாவின் முன்னோடியாக விளங்குகிறார். "**ஏவா பாம்பின் சூழ்ச்சியினால்** ஏமாற்றப்பட்டதைப் போல நீங்களும் உங்கள் எண்ணங்களைச் சீரழியவிட்டுக் கிறிஸ்துவிடம் விளங்கிய நேர்மையையும் தூய்மையையும் இழந்து விடுவீர்களோ என அஞ்சுகிறேன்" (2 கொரி 11:3) என்னும் பவுலடியாரின் அச்சத்தில் ஏவாளின் தோல்வி நன்கு வெளிப்பட்டுள்ளது.

ஏவாளை ஏமாற்றிய பாம்பை நோக்கிக் கடவுள் "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" (தொநூ 3:15) என்று கூறினார். இதன் லத்தீன் மொழிபெயர்ப்பான "வுல்காத்தா" விவிலியத்தில் "அவள் உன் தலையை நசுக்குவாள்" என்று சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. அதனால், நெடுங்காலமாகவே திருஅவையின் மரபின்படி அன்னை மரியா பாம்பை மிதிப்பதுபோன்ற ஓவியங்கள் தீட்டப்பட்டு வந்திருக்கின்றன.

விவிலியத்தின் பார்வையிலும் இந்த மரபு தவறல்ல. காரணம், "அமைதி தரும் கடவுள் சாத்தானை உங்கள் **காலடியில் நசுக்கிப் போடுவார்**" (உரோ 16:20) என்கிறார் பவுலடியார். அதன்படி, சாத்தானை காலடியில் நசுக்கும் ஆற்றலைக் கடவுள் நம் அனைவருக்கும் தந்திருக்கிறார். அதன் முன் அடையாளம்தான் அன்னை மரியா என்று திருஅவைத் தந்தையர் உறுதிபட எழுதியுள்ளனர்.

திருவெளிப்பாடு நூலில் "வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது; பெண் ஒருவர் காணப்பட்டார்; அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்; **நிலா அவருடைய காலடியில்** இருந்தது; அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்" (திவெ 12:1) என்று எழுதப்பட்டுள்ளது அன்னை மரியாவைக் குறித்தே என்பதும் திருஅவையின் நெடுங்கால மரபு. நிலவையே காலடியில் வைப்பவர் ஏன் பாம்பை மிதிக்க இயலாது? கடவுளின் அருளால் நிச்சயம் இயலும்.

ஏவாள்தான் அன்னை மரியாவின் முதல் முன்னோடி. மரியா புதிய ஏவாளாக சுடர்வீசி ஒளிர்கிறார். அவரைப் போற்றுவோமாக!



**அருள்பணி. குமார்ராஜா**





# பனிமய சாட்சியங்கள்

**பனிமய சாட்சியம் : 71**

## சாரோன் கலா, சென்னை மாதவரம்,

பெந்தகோஸ்தே சபையைச் சேர்ந்தவர். இவரது மகள் பிளஸ்ஸிக்கு 2019ஆம் ஆண்டு திருமணம் ஆனது. கருவுற்றார், ஆனால் , கலைந்துவிட்டது. அதன்பின்னர் 3 ஆண்டுகள் குழந்தை இல்லை. இவரது அப்பா கோவில்பட்டியைச் சேர்ந்த திரு. ஜெயக்குமார் தூத்துக்குடி பனிமய அன்னையின் பேராலயம் பலமுறை வந்தவர். எனவே, மகளை மாதா கோவிலுக்குப் போகச் சொன்னார்கள். சாரோன் கலா பெந்தகோஸ்தே சபையைச் சேர்ந்தவராக இருந்தாலும், தந்தையின் சொல்லை ஏற்று, சென்னையிலிருந்து 2021ஆம் ஆண்டு பனிமய அன்னையின் திருத்தலம் நேரில் வந்து மாதாவிடம் மகளுக்காக வேண்டினார். அன்னையின் ஆசியால் 2022 மே மாதம் பேரன் அக்கித் வியாஷ் பிறந்தான். சாரோன் கலா மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். பேரனுக்கு ஒரு வருடம் கழிந்தபிறகு தாயும் மகனும் மாதா கோவிலுக்கு வருவார்கள். அதுவரை காத்திராமல் அவரே தன் மகளின் சார்பாக வந்து ஒரு சேலையை மாதாவுக்குக் நன்றிக் காணிக்கையாகத் தந்துள்ளார். சேலை மாதா பீடத்தில் கட்டப்பட்டதைக் கண்ணால் கண்டு மகிழ்ந்து நன்றியுடன் இல்லம் திரும்பினார்.

**பனிமய சாட்சியம் : 72**

## ஜெயக்குமார், கோவில்பட்டி.

பனிமயத் தாயிடம் பாசம் கொண்ட திரு. ஜெயக்குமார் 12 ஆண்டுகளுக்கு முன் ஒரு கட்டி வந்து பெரிதும் துயருற்றார். தூத்துக்குடி வந்து நலம் தரும்படி பனிமயத் தாயிடம் வேண்டினார். என்னே வியப்பு! உடனே நலம் பெற்றார். அன்னைக்கு நன்றியாகக் கடந்த 12 ஆண்டுகளாக ஒவ்வொரு கொடியேற்றம், திருவிழாவுக்கும் தவறாது வந்து மாதாவுக்கு நன்றி செலுத்துகிறார். பனிமய அன்னையே வாழ்க!

**பனிமய சாட்சியம் : 73**

## சகாய கிளாட்சன், பாளையங்கோட்டை.

அண்மையில் பாளையங்கோட்டையிலிருந்து திரு. சகாய கிளாட்சன் நமது பேராலயத்துக்கு நன்றி செலுத்த வந்திருந்தார். நாற்பத்தேழு வயதான திரு. கிளாட்சனுக்கு 2021ஆம் ஆண்டு முதுகெலும்பு பாதிக்கப்பட்டது. திருநெல்வேலியிலுள்ள புகழ்பெற்ற மருத்துவமனைக்குச் சென்றபோது அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். வேறு நான்கு பிரபலமான மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சை கட்டாயம் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். கிளாட்சனின் மாமியார் திருமதி. ஜெயந்தி. அவர்களது ஊர் தூத்துக்குடி. பனிமய அன்னைமீது பெரும் பற்று கொண்டவர். அவர் தனது மருமகனுக்காக எப்படியாவது அறுவை சிகிச்சையின்றி தம் மருமகனை நலப்படுத்தவேண்டுமென்று பனிமயத் தாயிடம் மன்றாடி, நேர்ச்சை செய்துகொண்டார். சில நாள்களில் கோயம்புத்தூர் மருத்துவமனை ஒன்றுக்கு சென்றபோது, அங்கே அறுவை சிகிச்சையின்றி, மருந்துகள் மூலமே தண்டுவடத்தைக் குணப்படுத்திவிடலாம் என்று சொல்லி, அவ்வாறே செய்தும்விட்டார்கள். எனவே, பனிமய அன்னைக்கு நன்றியறிதலாக 4 கிராம் தங்கச் சங்கிலி ஒன்றை திரு. கிளாட்சன் அவர்கள் அன்னைக்குக் காணிக்கையாகச் செலுத்தி, தம் நன்றியை வெளிப்படுத்தியுள்ளார். பனிமய அன்னையே வாழ்க!

34

# 'பனிமயம்' 2016 – மீள் பார்வை



### விழுவோம் விதைகளாய்

நமக்குள் எழும் 'நான்', எனது, எனக்கு மட்டுமே என்ற சுயநல அகந்தையினைக் கைவிட்டு, நான் மற்றவருக்கு முக்கியமானவனாக இல்லை, இயேசு கிறிஸ்துவே எனக்கு முக்கியம், அவரே எனது வாழ்வின் மையப்புள்ளி என்ற மனநிலை இக்காலத்தில் நம்மில் மேலோங்க வேண்டும். நம்முடைய செயல்பாடுகள் அனைத்துமே அவரை மட்டுமே முன்னிலைப் படுத்துபவையாக அமைய வேண்டும்.

பாவங்களிலிருந்து நம்மை மீட்பதற்காக இயேசு அடைந்த துயரச் சிலுவைப் பாடுகளின் வழியாகவும், அவரின் கோர மரணத்தின் வழியாகவும், அவர் நம்மீது கொண்டுள்ள அளவற்ற அன்பினைத் தியானித்துச் சுவைக்க இத்தவக்காலம் நம்மை அழைக்கிறது.

இவைகளை வாழ்க்கை முழுவதும் நாம் கடைப்பிடிக்கப் பழகும்போது, நாம் புனிதத்துவமுற்ற விதையாக உருப்பெற்று, இறைவனின் இதயத்தில் விருட்சமாக வேரூன்றி வளருவோம்.

**– சகோ. சேவியர் FSC**

★ இயேசு 33 வயதில் கொல்லப்பட்டார். அதுவும் பகிரங்கமாக, பயங்கரமாக, இயேசுவின் கொலை, மறைவாக இருட்டில் நடைபெறவில்லை. எருசலேம் மக்கள் முன்னிலையில், நண்பகல் வேளையில் நடைபெற்றது. கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதை செய்து, பெற்ற தாயின் முன், ஊரார் அனைவரின் முன்னிலையில் அவரது ஆடைகளைப் பறித்து, பல்வேறு வசைமொழிகளைக் கூறி, சவால் விடுத்து, ஏளனம் செய்து, அணுஅணுவாகக் கொன்றார்கள்.

இயேசு நல்லவராக இருந்ததால், நல்லதைச் செய்ததால், தீயவர்களைச் சாடியதால், பாவிகளை அரவணைத்து நண்பர்களாக்கிக் கொண்டதால்தான், இப்படிப்பட்ட கொடூரமான சாவை அவர் சந்திக்க நேர்ந்தது. மானிட வரலாற்றில் இவ்வளவு கொடூரமான சாவு வேறு யாருக்கும் நேர்ந்திருக்காது. இச்சாவு அவர் எதிர்பார்த்ததுதான். தனது பாடுகளையும் சிலுவைச் சாவையும், அவர் மூன்று முறை தமது சீடர்களுக்கு அறிவித்திருந்தார். சீடர்களால் கடைசிவரை அதைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை.



அவரது சாவு, நல்லவர்களுக்கு என்ன நேரிடும் என்பதற்கான முன்னோட்டம். நல்லவர்களுக்கும், நல்லதைச் செய்பவர்களுக்கும், தீமையைச் சாடுபவர்களுக்கும் இந்த உலகம் இன்றும் இப்படிப்பட்ட சிலுவைச் சாவைத்தானே, ஏதோ ஒரு விதத்தில் கொடுத்துக் கொண்டிருக்கிறது!

**– முனைவர் அருள்திரு. லெரின் டிரோஸ்.**

★ அன்பு ஒன்றே உறவுக்கு அடித்தளம். உறவு ஒன்றே உயிருக்கு அடைக்கலம். அன்பில்தான் உறவு மலர்கிறது. உறவு மலர்கையில் நிறைவு தருகிறது. அந்த நிறைவே இறையாட்சி உதயமாக வழிகோலுகிறது.

மனித குலத்தின் தாகமே ஒற்றுமைதான். அன்பு ஒன்றே அத்தாகத்தைத் தணிக்கும் பானம். மனிதனின் உரிமைகள் மறுக்கப்படும் சமூகம் இறைவனுக்கு ஏற்றதல்ல. நல்இதயங்கள் இறைவழியினில் இணைகின்ற போது, சுயநலம் வேரறுந்து விடுகிறது. ஏழை மனிதரில் நம் முகம் கண்டு ஏங்கிடும் இதயத்திற்கு அன்பினை ஈந்து, உண்மை, நீதி, அன்பு கொண்ட தீபங்களாக நம்மையே கரைத்திட வேண்டும். மனித நேயம் காத்திடும் எண்ணத்தோடு நாளும் இறைவழி நடந்திட வேண்டுமே.

**– மரிய ரோசலின்.**

**பெண்களின் மேன்மை**

பெண் என்பவள் இவ்வுலக வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவளாக இருக்கிறாள். எவ்வளவு பெரிய அரசை ஆளும் வல்லமை ஆணுக்கு இருந்தாலும், ஓர் உயிரை இவ்வுலகுக்குக் கொண்டு வரும் சக்தி பெண்ணுக்கே உள்ளது. அவளே உறவுக்கு உயிர் கொடுப்பவளாக இருக்கிறாள்.

'தாய்மை' என்ற சொல்லுக்குச் சிறந்த சான்றாக அன்னை மரியாவைக் கூறலாம். அவர்தம் ஒரே மகனை இவ்வுலக மக்களுக்காகத் தியாகம் செய்தார். இப்போது அவர் நமக்கெல்லாம் அன்னையாகத் திகழ்கிறார். – **மு.மேகலா** – தஸ்நேவிஸ் மாதா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ..... (மார்ச் 8 அனைத்துலக மகளிர் தினம்)

★ நம்மில் பலர் நாற்பது நாற்பத்தைந்து ஆண்டுகளாகப் பாவத்திலேயே வாழ்ந்து வருகிறோமே, அது எப்படி? அதாவது, கடைசியாக நாம் பாவசங்கீர்த்தனம் என்ற அருளடையாளத்தில் பங்கேற்றது நம் திருமணத்தின்போதுதானே! அதற்குப் பின் அரைத்த மாவையே அரைப்பதால், பாவ சங்கீர்த்தனத் தொட்டியின் பக்கமே நாம் செல்வதில்லையே!

ஒவ்வொரு ஆலயத்திலும், திருவிழா நாட்களிலும், தவக் காலத்திலும் அதைக் காணாதவர்களாக விலகிச் சென்று விடுகிறோமே! ஆனால், தினசரி திருப்பலியில் திருவிருந்தில் பங்கேற்கத் தவறுவதில்லை! மற்றவர்கள் நம்மைத் தப்பாக எடுத்துக் கொள்வார்களே என்பதால்.

சிலர் அருட்தந்தையரிடம் பாவ அறிக்கை செய்வதைத் தவிர்க்கிறார்கள். நேராகக் கடவுளிடம் பாவ அறிக்கை செய்துகொள்ளலாம் என்று சாக்குப்போக்குச் சொல்லிக் கொள்கிறார்கள். தூய ஆவியாரின் கனிகளைப் பெற்ற சிலர், தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற மேட்டுமை கொள்கின்றனர். அவர்களுக்காகத்தான், "தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பது பற்றி மகிழ வேண்டாம். மாறாக, உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றி மகிழுங்கள்" என்று லூக்கா 10:20ல் கூறப்பட்டுள்ளது.

பாவ சங்கீர்த்தனம் செய்து, ஆண்டவரின் மன்னிப்பைப் பெற்று, உடல் நலத்தோடு இறையாட்சியைப் பெற்றுக் கொள்வோம்.

**– ம. வெனான்சியுஸ்**



**கலாபன் வாஸ்**
94863 90793

பனிமய அன்னை 29

# பனிமயம் பாடும் பாவலர்கள்

## 1. வேம்பார் பாவலர் பு.விஜயன் விக்டோரியா

பாவலர் விஜயன் விக்டோரியா வேம்பாரில் 1926-ஆம் ஆண்டு டிசம்பர் 14-ஆம் தேதியன்று பிறந்தார்.

இவருடைய பெற்றோர்கள் **அருள்சாமி விக்டோரியா, மரிய புஷ்பம் கர்வாலோ.** இவரது பாட்டனார் வேம்பார் கோயில்பிள்ளை **குரூஸ் மிக்கேல் விக்டோரியா** என்பவர்.

இலங்கையில் குடியேறிய பாவலர் கொழும்பில் உள்ள செயின்ட் பெனடிக்ட் கலாச்சாலையில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்தார். 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ஆம் நாளன்று தனது 69-வது வயதில், இவர் அமெரிக்காவில் நல்மரணமடைந்தார்.

இவரின் ஞானஸ்நானப் பெயர் **சூசை மனுவேல் அந்தோணி விஜயன்** என்றாலும், புனைப் பெயர் **விஜயசிங்கன்** என்பதாகும்.



### பனிமய அன்னைக்கு அஞ்சலி

மீனார்ந்த முடி சென்னியிலே
மிகுசுடர் வீசத் தரித்து
வானார்ந்த பாலன் திருக்கரம்
வரித்து வைத்துக் களித்து
தானார்ந்த தண்மதித் தாளினில்
தாமரை மலரைத் தாங்கி
தேனார்ந்த மாசறு வதனமாய்க்
காட்சி தரு**நேவிஸ் தாயே !**

மண்ணுக்கு மரம் பாரமோ
மரத்துக்குக் கிளை பாரமோ
கண்கவர் கிளைகொடி யவைக்குக்
காய்கனி தாம்பார மாகுமோ
கண்மணி சேய்கள் மட்டும்
கனபார முந்தனுக் காவரோ
விண்ணவர் ஏந்தும் அன்னையே
விரைந்தெமைப் புரக்க வாராயோ !

தேன்சுவை மறந்த வண்டினம்
தாரணி எங்குமே இல்லை
வான்மழை மறந்த பயிரினம்
வையகம் முழுதுமே கண்டிலேம்
வானொளி மறந்த மலரினம்
வதங்கி வாடுதல் உண்டு
நான்சார் மதிகுலம் நீயலால்
நானிலம் வாழுமோ அம்மா !



சந்திரகுல மைந்தராம் யாம்
சொந்தம் நவில் **பனிமயமே**
சந்ததமுன் புகழ் பெருக்கி
சற்குணராய் செகம் வாழ்ந்திட
எந்தையாம் பரமனின் கிருபை
எமக்காக நாளும் வேண்டி
உந்தனரு ளீந்து காப்பாய்
சந்த**தஸ் நேவிஸ் மரியே** !

ஆண்டவருள் ஈசன் அணைவால்
அல்லற் பிறவி அறுக்கவும்
தீண்டும் பசிப்பிணி பகைமை
தீர்ந்து செல்வம் கொழிக்கவும்
வேண்டும் பதவி கிடைக்கவும்
வெளிவீட் டின்பம் அளிக்கவும்
தூண்டல் செய்வாய் தெய்வத்
தமிழால் தொழுதனன் தாயே !

*(நன்றி : பனிமயப் பூங்கா' – கொழும்பு, 1970)*

மரியே வாழ்க !



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**



# தவக்காலம் 2023 திருநிகழ்வுகள்

## வியாழன்தோறும் மாலைத் திருப்பலியைத் தொடர்ந்து குறுந்தியானங்கள்

1. 02.03.2023 - சொல்லத் தவறிய பாவங்கள்
2. 09.03.2023 - பாவங்கள் நூறு!
3. 16.03.2023 - இயேசுவின் உவமைகள் காட்டும் பாவங்கள்
4. 23.03.2023 - பாவ அறிக்கையின் சிறப்புகள்
5. 30.03.2023 - ஒப்புரவு அருள்சாதன ஆசீர்வாதங்கள்

## ஞாயிறு சிறப்பு நிகழ்வுகள்

1. 12.03.2023 மாலை 06.00 திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் **தவக்கால நற்செய்திக் கூட்டம்.**
2. 19.03.2023 காலை 09.30 முதல் மாலை 04.00 வரை மங்கலகிரி டிவைன் மெர்சி தியான இல்லத்தில் ஒருநாள் **தவக்காலத் தியானம்.** (அருள்பணி. இசிதோர்)
3. 26.03.2023 மாலையில் ஆயர் தலைமையில் **தவப் பவனி** நமது பேராலயத்தில் தொடங்கி, திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் நிறைவுபெறும்.

நம் திருஅவை, நமது பெருமை - 14

சென்ற இதழ் தொடர்ச்சி...


# திருத்தந்தையர்!




**5. அருளாளர் 23ஆம் ஜான்** (1881–1963): இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டிய பெருமை உடைய இத்திருத்தந்தை, அதற்கு முன் பல நாடுகளில் திருத்தந்தையின் தூதுவராகப் பணியாற்றியவர். இரண்டாம் உலகப் போரின் போது யூதர்கள்மீது பரிவுகாட்டியதால் பாராட்டப்பட்டவர். அவரது கனிவு, மாந்தநேயம், நகைச்சுவை உணர்வின் காரணமாக அனைவருக்கும் பிரியமானவர். இவரும் 2000ஆம் ஆண்டில் “அருளாளர்” நிலைக்கு உயர்த்தப்பட்டார். இவரது உடல் இன்னும் அழியாமல் இருக்கிறது என்பது கூடுதலான பெருமிதம் தரும் செய்தி. இளமைப் பருவத்திலிருந்தே அவர் எழுதி வந்த ஆன்மீகக் குறிப்புகள் தொகுக்கப்பட்டு “ஓர் ஆன்மாவின் ஏடு” (Journal of a Soul) என்னும் தலைப்பில் வெளியானது.



**6. இறை ஊழியர் 6ஆம் சின்னப்பர்** (1963–1978): இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து நடத்தி, திருஅவையைப் புதிய பாதையில் வழிநடத்தியவர். அதே ஒளியில் புதிய வழித்தடங்களை உருவாக்கியவர். பிற கிறித்தவ சபையினருடன் உரையாடலுக்கு வழி வகுத்தார். வத்திக்கானுக்கு வெளியே பயணங்கள் மேற்கொண்டார். ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றினார். புனித பூமிக்கும், ஏன் நமது நாட்டுக்கும் (1964ஆம் ஆண்டு) வருகை தந்தார். “கருத்தடை” பற்றிய நிலைப்பாட்டில் உறுதியாய் இருந்தார். புனிதர் நிலையின் தொடக்க நிலையான “இறை ஊழியர்” நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.



**7. புனித 2ஆம் ஜான் பவுல்** (1978-2005):



திருஅவையின் தலைமைப் பணியில் வெள்ளிவிழா (26 ஆண்டுகள் 5 மாதங்கள்) கண்ட சாதனையாளர் நம் அனைவரின் நெஞ்சிலும் வாழும் ஜான்பவுல். இளையோரையும், பிற மதத்தவரையும் ஈர்க்கும் வசீகரம் நிறைந்தவர்.

தமது பணிக் காலத்தில் 129 நாடுகளுக்குத் திருப்பயணம் செய்து சாதனை புரிந்தார். நாம்; அனைவருமே தூயோராக வாழ முடியும் என எடுத்துக்காட்டும் விதமாக 1340 பேரை அருளாளர் நிலைக்கும், 483 பேரை புனிதர் நிலைக்கும் உயர்த்தினார்.

2005 ஏப்ரல் 8 அன்று நடைபெற்ற இவரது அடக்கச் சடங்கு உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியது. நான்கு அரசர்கள், ஐந்து அரசியர், குறைந்தது 70 நாட்டுத் தலைவர்கள் கலந்துகொண்டு ஐக்கிய நாடுகள் சபைக்கு வெளியே இத்தனை உலகத் தலைவர்கள் பங்குகொண்ட மிகப்பெரிய நிகழ்வு என்ற பெயரைப் பெற்றது. அத்துடன் 14 பிற சமயங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். அது மட்டுமல்ல, 40 லட்சம் மக்கள் திரண்ட உலகின் மாபெரும் இறுதி ஊர்வலமும் அதுதான் என கின்னஸ் சாதனை நூலிலும் இடம்பெற்றது என்பது திருத்தந்தை ஜான் பவுலின் புகழுக்குச் சான்று

**8. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்** (2005-2013):



2013 பிப்ரவரி 11ஆம் நாள், லூர்து அன்னை திருவிழா அன்று வத்திக்கானில் நடைபெற்ற கர்தினார்மார் கூட்டத்தில் உரையாற்றிய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் சொன்ன செய்தி கேட்டு அனைவரும் அதிர்ச்சியில் உறைந்தனர்: “உடல் மற்றும் மனவலிமைக் குறைவின் காரணமாக நான் பணிவிலகிக் கொள்கிறேன்” என்பதுதான் அச்செய்தி.

உலகம் முழுதும் வாழும் ஒரு பில்லியன் கத்தோலிக்கர்கள் மட்டுமல்ல, கத்தோலிக்கர் அல்லாத பிறரும்கூட இச்செய்தியை வியப்புடன் பார்த்தனர். 600 ஆண்டுகளுக்குப் பிறகு, திருத்தந்தை ஒருவர் தாமாகவே பணி விலகியிருக்கிறார். உடனடியாக வருத்தத்தைத் தந்தாலும், பல கத்தோலிக்கர்களுக்கும் இச்செய்தி பெருமிதத்தையே தந்தது. எவ்வளவு மாபெரும் நிகழ்வு இது! திருத்தந்தை பதினாறாம் பெனடிக்டின் பற்றற்ற தன்மை, எளிமை, திருஅவையின்மீதுள்ள அன்பு, ஆன்மீக முதிர்ச்சி என அவரது ஆளுமையின் பல அருங்குணங்களை ஒரே நேரத்தில் வெளிப்படுத்திய செயல் இது. அனைவரது பாராட்டையும் பெற்று, வரலாற்றிலும் இடம் பெற்றுவிட்டார். வாழ்க ஜோசப் ரட்சிங்கர்!

2022 இறுதிவரை “முன்னாள் திருத்தந்தை” என்னும் பெயரோடு நம்மோடு வாழ்ந்த இவருக்கு இறையியலாளர், நிர்வாகி, சிந்தனையாளர், பேராசிரியர் என்னும் பல முகங்கள் உண்டு. பழமைவாதி என்று சிலர் சொன்னாலும், வலைத் தளம் மூலம் இலட்சக்கணக்கானோருடன் தொடர்பு கொண்ட முதல் திருத்தந்தை என்னும் புகழ் பெற்றார். “நாசரேத் இயேசு”, “திருஅவையின் வல்லுநர்கள்” உள்ளிட்ட 66 நூல்களின் ஆசிரியரும்கூட.



**9. திருத்தந்தை பிரான்சிஸ்.** இன்று நம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் பல விதங்களில் புகழ்பெற்றவர், நம்மை பெருமிதப்படுத்துபவர்.

**“கிறிஸ் மிலியன்”**

# விவிலியப் போட்டி 98

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

திருவெளிப்பாடு அதிகாரங்கள் 6 முதல் 15 வரை)

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. நடுவானில் பறந்து கொண்டிருந்த பறவையின் பெயர் என்ன?
2. இருபது கோடி எண்ணிக்கைக் கொண்ட படை எது?
3. ஏழு முத்திரைகளை உடைத்தது எது?
4. புகையிலிருந்து நிலத்துக்கு வந்தவை எவை?
5. சாவு என்று பெயர் தாங்கியவர் எதில் ஏறியிருந்தார்?
6. வெட்டுக்கிளிகள் எவற்றைப் போல் வாலும், கொடுக்கும் கொண்டிருந்தன?
7. கடலிலிருந்து வெளியே வந்த விலங்கு எது?
8. ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் கொண்டவை எவை?
9. வெட்டுக்கிளிகளின் பற்கள் எவற்றை ஒத்திருந்தன?

**குறிப்பு : கிடைக்கும் விடைகள் இரண்டாம் வருகையில் வரப்போகும் உயிரினங்கள்.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.03.2023**

## விவிலியப் போட்டி 97

**பிப்ரவரி 2023 விடைக்குறிப்புகள்**

திருவெளிப்பாடு அதிகாரங்கள் 1 முதல் 5 வரை)

| | | |
|---|---|---|
| 1. | ஏழு | திவெ 4:5 |
| 2. | ஏழு | திவெ 1:16 |
| 3. | ஏழு | திவெ 5:1 |
| 4. | ஏழு | திவெ 1:4,5 |
| 5. | ஏழு, ஏழு | திவெ 1:20 |
| 6. | ஏழு | திவெ 5:6 |
| 7. | ஏழு, ஏழு | திவெ 5:6 |
| 8. | ஏழு | திவெ 5:5 |
| 9. | ஏழு, ஏழு | திவெ 1:20 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**93458 16875** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.



**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 199**

## I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 117

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

## பரிசு பெறுபவர்கள் : 4

| | | |
|---|---|---|
| 1. | பனிமய அன்பியம் | **மெர்சி கோமஸ்** |
| 2. | பரிபூரணமாதா அன்பியம் | **ஜெனிஷா** |
| 3. | பவுலடியார் அன்பியம் | **லீமாரோஸ்** |
| 4. | பொம்பெயி மாதா அன்பியம் | **லூடா கான்ஸ்டன்** |

## பாராட்டுக்குரியவர்கள் : 113

5. அருள்சகோ. ரோசம்மாள்

**அந்தோனியார் அன்பியம்**

6. சரோஜா
7. பிருந்தா சார்லஸ்
8. ஜெயா
9. லூக்காஸ் சகாயம்
10. ரீனா மொறாயிஸ்
11. இருதயம்மாள் கபிரியேல்
12. டெல்பினஸ்

**அன்னை தெரசா**

13. சுகன் மோனிஷா
14. சுரேஷ் பிரேமா
15. அஜய் ரெயிசா

**அன்னை வேளாங்கன்னி**

16. டென்சி
17. ஆல்வின் மோத்தா

**கிறிஸ்தரசர்**

18. செலஸ்கி கிளமென்ட்
19. ரெக்ஸ் கிரீன்வெல்
20. ஜூலியட் சாவியோ
21. லூரட் வசந்த்
22. எமிலியன் ரோச்

**தஸ்நேவிஸ் மாதா**

23. ஸ்நோபா ஃபான்டினா

**திவ்யபாலன் அன்பியம்**

24. பிரின்சி
25. சகாயராஜ் தனராஜ்

**பாத்திமா மாதா**

26. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
27. ஜெசிந்தா கான்ஸ்டன்
28. ஸ்டெஃபி ரீகன்
29. மைக்கேல் ஜெனிட்டா
30. ராஜா ரீனா
31. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**

32. இருதயம்மாள் கொன்சால்
33. சித்ரா மோத்தா
34. பிரைட்டன் ஜெரோபின்

**ஜெபமாலை மாதா**

35. சகாயம்மாள் பெனடிக்ட்
36. கல்யாணி செல்வராஜ்
37. ஆரோக்கியசாமி

**ஜூடு அன்பியம்**

38. அந்தோனிசாமி
39. ட்ரைபேனா
40. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**

41. வெனிட்டாள்
42. ஜெயா அகஸ்டின்
43. சாந்தி ஆல்ட்ரின்
44. ட்ரினிஷா
45. சார்லட்
46. எலிஜா இம்மானுவேல்
47. ஜான் ஆல்ட்ரின்
48. பிரிசில்லா

**குழந்தை தெரசா**

49. கிறிஸ்டி லிஸ்டன்
50. ஷோபனா கோமஸ்
51. பெனி மொறாயிஸ்
52. ஆரோக்கிய செசிலியா
53. கிளைட்டன்
54. டென்சன்

**குழந்தை இயேசு**

55. மோனிகா செபாஸ்டின்
56. அந்தோனியப்பா பிச்சம்மாள்
57. எமல்டா
58. பியோ

**லூர்து மாதா**

59. ஃபிலோ கோமஸ்
60. ஜெனோ சேவியர்
61. ரம்யா
62. ரோஸ்லின் தாமஸ்
63. சாண்டினா
64. ஆலிவர் வி. ராயன்
65. சகாயராணி
66. ரஜூலா ஜான் போஸ்கோ

**மணல் மாதா**

67. கெயிட்டன் ஃபர்னான்டோ
68. ரொசாரி கோமஸ்
69. ஜெயந்தி
70. ரொசாரி ரசிகா

**மிக்கேல் அதிதூதர்**

71. எல்சிட்டா
72. ஷீபா
73. வினோ அந்தோனி

**பனிமய அன்பியம்**

74. ஜூடு ரதி
75. சுரேஷ் ஆனி
76. டைட்டஸ்

**பவுலடியார்**

77. ராஜா ரோஸ்லின்
78. ரஸ்கின் வசந்தா
79. ஜான்சன் ஒஃபிலியா
80. லீமா ரோஸ்

**பரிபூரணமாதா**

81. மெடோனா

**பொம்பெயி மாதா**

82. மாத்யூ கர்டோசா
83. தெரசா பிரகாஷ்
84. இம்மாக்குலேட்
85. டிஃபானி அண்டோ
86. அந்தோனியம்மாள் மச்சாடோ
87. ஸ்நோ ஆல்பிரிக்

**இராயப்பர்**

88. ஷைனி
89. நேவிசம்மாள்
90. டெய்சி

**சவேரியார்**

91. டெலிலா அமலன்
92. ஆரோக்கியராஜ் ஹெலினா
93. ஜோர்னல் ஜென்சி
94. அனுஷ்யா பீட்டர்
95. ரூபா மனுவேல்
96. சகாயம் ஆண்டன்

**செபஸ்தியார்**

97. ஜெசிலா சேவியர்
98. அந்தோனியம்மாள் டென்சிங்
99. பிரவீணா

**சிந்தாத்திரை மாதா**

100. நேசம்
101. ஜூடி ஆரோக்கியராஜ்
102. டிஜேபிஆர் இராயன்
103. மெடோனா ஜோசப்

**சிறுமலர் அன்பியம்**

104. செலஸ்டின்
105. விஜி சகாயராஜ்
106. எல்சிற்றா ஆனந்த்

**சூசையப்பர்**

107. ரூபி கொர்னேலியுஸ்
108. மென்சி
109. கிறிஸ் ரிஜோ
110. ஹேமா சேவியர்
111. மோனிஷா
112. ஜூடி கெஜேந்திரன்

**திருச்சிலுவை**

113. சரோலின் கில்டன்
114. மேரி கிரேட்டா

**வியாகுல மாதா**

115. கெலிண்டன்
116. மார்ஷல் அஞ்சு
117. ராஜா ஜரின்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 82

### பரிசு பெறுபவர்கள் : 4

118. தூத்துக்குடி லயன்ஸ் டவுண் **சுகிர்தா**
119. தூத்துக்குடி ரத்தினபுரம் **தயாபர ராணி**
120. பெரியகுளம் **குழந்தை தெரஸ்**
121. பாளையங்கோட்டை **டெனிசா ஃபர்னான்டோ மெட்டில்டா மேரி**

### பாராட்டுக்குரியவர்கள் : 78

**ஆலந்தலை**
122. ஃபொன்சேகா
123. மரியம்மாள்
124. மேரி லோபோ
125. சகாயராணி

**வீரபாண்டியன்பட்டணம்**
126. ஆன்ட்ரின் சில்வேரா
127. ஷாந்தினி

**ஆறுமுகனேரி**
128. தொம்மை அந்தோனி

**சேதுக்குவாய்த்தான்**
129. ஞானம் பாலசிங்

**புதியம்புத்தூர்**
130. ஹெலன் அன்னமணி

**சென்னை**
131 கமலஜோதி ஜெயசீலன்
132. ஒஃபிலியா தாமஸ்
133. எட்வர்ட்
134. வின்செந்தி
135. ஆகத்தா

**பாளையங்கோட்டை**
136. பிரேமா குணசீலன்
137. சுவர்ணா
138. ரோசி

**பேட்டை**
139. ஹெலனிட்டா

**கயத்தாறு**
140. அமல்ராஜ்

**உரியூர்குப்பம்**
141. சகோ. லெட்டீசியா

**பெரியகுளம்**
142. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
143. மரிய மதலேன்
144. ஜெர்மேன்
145. ரொசாலி

**கோயம்புத்தூர்**
146. சகோ. லூக்காஸ்
147. ஆஷா தனசீலன்

**பல்லடம்**
148. பிரான்சிஸ் ஆர்லன்

**திருமானூர், கும்பகோணம்**
149. பீட்டர்

**அரக்கோணம்**
150. குமாரி சந்திரசேகர்

**திருச்சி**
151. மோனிட்டா கிறிஸ்டி
152. மேத்யூ விவேக்
153. டோனி
154. சில்வியா மேரி

**சேலம்**
155. சூசைராஜ்

**மதுரை**
156. சகோ. அப்போலின்

**வடக்குத்து**
157. ஹென்றிதாஸ்

**பாம்பன்**
158. சுதா

**பரமக்குடி**
159. சீமோன் விமல் சாந்தி

**கும்பகோணம்**
160. குழந்தை தெரஸ்

**<u>தூத்துக்குடி நகர பங்குகள்</u>**

**திரு இதயங்களின் பேராலயம்**
161. பெனிட்டா
162. சுசீலன்
163. ரமோலா கமிலஸ்
164. ரிமோல்டா
165. ஜேன் கிளைட்டன்
166. ஜூலியட் வாஸ்

**குருஸ்புரம்**
167. ஆசீர்வாதம்
168. தமிழ்ச் செல்வன்
169. பௌவுசி ஜோ மைக்கேல்
170. டெல்ஃபின்
171. பிளசி செல்வராஜன்
172. ஜான்சி மென்டிஸ்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
173. லிசியா

**யூதா ததேயு கோவில்**
174. ரோஸ் சேவியர்
175. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
176. சாந்தினி
177. ரியாலினோ
178. பேபி வால்டர்
179. அன்சிட்டா
180. யூஜினியா
181. ஜாக்சன்
182. ஜனோவா
183. அனித்தா

**லூர்தம்மாள்புரம்**
184. ரெனிஸ்டன் ஜெர்லின்

**சார்லஸ் கோவில்**
185. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
186. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
187. லிஜியா ஃபர்னான்டோ
188. ஜெசிந்தா ஃபர்னான்டோ
189. செக்கரியா சாமுவேல்

**இஞ்ஞாசியார்புரம்**
190. அற்புத செல்வி
191. சூசை நவீன்


**இரத்தினபுரம் சவேரியார் கோவில்**
192. விர்ஜின்

**அந்தோனியார் கோவில்**
193. சுஜாதா மகேஷ்
194. மென்சிலா லொயோலா

**திரேஸ்புரம்**
195. கோல்வின் ஜேசுராஜ்
196. ஃபிலோ சான்ட்ரியா
197. ஜெற்ருலியா

**பாத்திமா நகர்**
198. ஹேம்லின் விஜய்

**பெத்தனி கான்வென்ட்**
199. சகோ. ஜெமினா




**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் :**

**182**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் :**

**199**


மாதம் ஒரு மாதா படம் : 38
தேற்றும் தாய்!
ஓவியர் ஜெயராஜ்

# பனிமயப் பகிர்வு

**(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 44)**

**மார்ச் - 2023**

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி பால் ரோமன் | 94889 42202 |
| களப் பணியாளர் | : | சகோதரர் பெல் கிளிண்டன் | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ கூட்டுத் திருமணம் : 20.08.2023
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 28.05.2023
- ✓ புதுநன்மை அருள்சாதனம் :
  உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.



## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

433. லூர்து அன்னன்யின் விழாவுக்கு ஆயத்தமாக லூர்தன்னைக் கெபியில் விவிலியப் பாசறை (எண்: 91) **"பழைய ஏற்பாட்டில் மரியன்னையின் முன்னோடிகள்"** என்னும் தலைப்பில் 31.01.2022 மாலை 06.15 மணிக்கு நடைபெற்றது. மொத்தம் 42 பேர் கலந்துகொண்டனர்.

434. லூர்து அன்னையின் விழா 01.02.2023 புதன் அன்று தொடங்கி, 11.02.2023 சனி அன்று நிறைவுபெற்றது. 10.02.23 வெள்ளி மாலை ஆராதனைக்கு செயின்ட் தாமஸ் பள்ளிகளின் தாளாளர் அருள்பணி. இராயப்பன் தலைமையேற்றார். மறுநாள் காலை 06.30 திருவிழாத் திருப்பலிக்கு கால்டுவெல் காலனி பங்குத் தந்தை அருள்பணி. பிரதீப் தலைமையேற்றார். மாலையில் சப்பரப் பவனியும், நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. விழாவின் 11 நாள்களும் திரளான மக்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

435. **"குடும்பங்களின் ஆசீர்வாதங்களுக்கான"** மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (28) 18.02.2023 அன்று நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் பல்வேறு பங்குகளிலிருந்து தங்கள் பெயர்களைக் கொடுத்திருந்த 130 குடும்பங்களுக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

436. இந்த ஆண்டின் தவக்காலம் 22.02.2023 சாம்பல் புதன் அன்று தொடங்கியது. மூன்று திருப்பலிகளிலும் சாம்பல் பூசப்பட்டது. நண்பகல் 12.00 முதல் 03.00 வரை **தவக்காலத் தொடக்க நோன்பு வழிபாடு** நடைபெற்றது.

437. நமது ஆயர் மேதகு ஸ்டீபன் ஆண்டகையின் நான்காவது ஆயர் திருநிலைப்பாட்டு நாளை முன்னிட்டு 23.02.2023 வியாழன் மாலையில் திருஇதயங்களின் பேராலயத்தில் நடைபெற்ற கூட்டுத் திருப்பலியில் நமது பங்குத் தந்தையரும், பங்கு மக்களும் கலந்துகொண்டு ஆயருக்காக மன்றாடினர். பேராலயத்தில் மாலைத் திருப்பலி நடைபெறவில்லை.

438. தவக்காலத்தின் முதல் ஞாயிறாகிய 26.02.2023 மாலை 04.30 மணிக்குப் பேராலய வளாகத்தில் சிலுவைப் பாதை நடைபெற்றது. மாலை 06.30 மணிக்கு லூர்து மாதா கெபியில் "சொல்ல மறந்த பாவங்கள்" என்னும் தலைப்பில் விவிலியப் பாசறை (92) நடைபெற்றது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 120. | ட்ரிஷான் | தினேஷ் - ஷங்கா | 05.02.2023 | சிந்தாத்திரை |
| 121. | அனனின் யாஷ் | பிக்சன் - சிந்து | 05.02.2023 | செபஸ்தியார் |
| 122. | ஜெஃப்ரினா சாரா | ஜோர்னல் - ஜென்சி | 12.02.2023 | சவேரியார் |
| 123. | அலன் | ஆக்னல் - வினோதினி | 19.02.2023 | இரக்கத்தின்மாதா |



### வாழ்த்துகின்றோம்

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 141. | ரியா | ரீகன் - சில்வியா | 18.02.2023 | மிக்கேல்தூதர் |
| 142. | குரூஸ் ஷெர்வின் | நெப்போலியன்-சாந்தி | 19.02.2023 | பனிமயம் |



### ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | திருமணநாள் |
|---|---|---|---|
| 110. | காலேப் - பூர்ணிஷா | பொம்பெய் மாதா | 06.02.2023 |



### செபிக்கின்றோம்

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 144. | கேன்டத் பெர்னான்டோ | ராஜையா | 26.01.2023 | குழந்தைதெரசா |
| 145. | லூர்துசாமி | பிச்சையா | 31.01.2023 | அன்னைதெரசா |
| 146. | ஜெயமேரி பொன்சேகா | பீட்டர் | 03.02.2023 | காவல்தூதர் |
| 147. | ஜோபாய் மச்சாது | தனிஸ்லாஸ் | 18.02.2023 | அந்தோணியார் |

## நடைபெற இருப்பவை

★ **முதல் வியாழன் திருமணி ஆராதனை** 02.03.2023 வியாழன் மாலைத் திருப்பலி முடிந்ததும் நடைபெறும். தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்படும்.

★ 03.03.2023 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 04.04.2023 முதல் சனி அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

★ 18.03.2023 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (29)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை **"தொழில் நிறுவனங்களின் ஆசிகளுக்காக"** என்னும் கருத்துக்காக நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.

★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.



| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 119. | 07.03.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தலையான பாவம் 3: பொறாமை |
| 120. | 14.03.2023 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்ட் ரவி | தலையான பாவம் 4: கோபம் |
| 121. | 21.02.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | தலையான பாவம் 5: மோகம் |
| 122. | 28.02.2023 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | தலையான பாவம் 6: பெருந்தீனியார்வம் |
| 123. | 04.04.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தலையான பாவம் 7: சோம்பேறித்தனம் |

## அன்புடன் வரவேற்கிறோம்

**நமது பங்கில் புதிதாக இணைந்துள்ள பின்வரும் குடும்பங்களை வரவேற்கிறோம்.**

| எண் | தலைவர் | அன்பியம் | குடும்ப அட்டை எண் |
|---|---|---|---|
| 41. | சகாய ஸ்மைலா | சிறுமலர் | 68 |
| 42. | பெலிஸ் ராஜசேகர் | ஜூடு | 84 |
| 43. | செல்வராஜன் | ஜூடு | 85 |
| 44. | ரெனிகோமஸ் | ஜூடு | 86 |
| 45. | ரெனிஸ்டன் | பனிமயம் | 67 |
| 46. | அந்தோணிபிரின்ஸ்டன் | செபஸ்தியார் | 72 |
| 47. | சகாயலியோ | செபஸ்தியார் | 73 |
| 48. | சேசுமரியலிடன்ஸ் | வியாகுலமாதா | 71 |
| 49. | அருள் ராஜ் | இரக்கத்தின் மாதா | 79 |
| 50. | நிர்மலா ஜூடு | இரக்கத்தின் மாதா | 80 |
| 51. | ஜோசப் ஆல்டிரின் டிவோட்டா | குழந்தைதெரசா | 87 |
| 52. | கெஜிட்டன் | குழந்தைதெரசா | 88 |


## அன்புடன் வழியனுப்புகிறோம்

**நமது பங்கைவிட்டு வெளியேறிய பின்வரும் குடும்பங்களை வாழ்த்தி வழியனுப்புகிறோம்.**

| எண் | தலைவர் | அன்பியம் | குடும்ப அட்டை எண் |
|---|---|---|---|
| 49. | அண்டனி லூட்டஸ் | அந்தோணியார் | 86 |
| 50. | ஷோபனா | இரக்கத்தின் மாதா | 72 |

"நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறுபெற்றோர்" (திபா 65:4)

## 60வது நாள் நினைவு அஞ்சலி



# S. அலங்காரம் பர்னாந்து


பிறப்பு 05.08.1937 இறப்பு 16.01.2023

அப்பாவின் அன்பைவிட சிறந்த அன்பு
இந்த உலகில் எதுவும் கிடையாது.
செதுக்கப்பட்ட ஒவ்வொரு சிலையும் கடவுள் என்றால்
எனக்கு அப்பாவும் கடவுள்தான்.
காசு பணம் உங்கள மயக்கலப்பா...
துரோகிகளே வந்தாலும் வெறுத்து நீங்க ஒதுக்கலையே...
அன்பு இவரது மந்திரம்
இவரிடம் இல்லை என்றும் தந்திரம்
கடவுள்கிட்ட இருக்கீங்கப்பா...
எங்களுக்காக வேண்டுதல் செய்யுங்கப்பா
நாட்கள் ஓடிய பின்பும் வற்றாத நினைவோடு
வடிக்கிறது விழிகள் நீரை
மண்ணறையில் மறைந்தாலும்
மன அறையில் நிலைத்திருப்பேன்
என்றும் எனது அருகில் இருக்கும் அப்பாவுக்கு
கண்ணீர் அஞ்சலி...

உங்கள் பிரிவால் வருந்தும்
மனைவி, மகள்கள், மகன்கள், மருமக்கள்
பேரன்கள், பேத்திகள், பூட்டன், பூட்டிகள்
மற்றும்
உற்றார் உறவினர்கள்

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய்த் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்" (எசா 62:3)

## 24ஆம் வருட நினைவு அஞ்சலி



# பியோ ராயன் பர்னாந்து

பிறப்பு 10.12.1978 இறப்பு 11.09.1999

பிரிவால் துயருறும்
அம்மா : ராஜேஸ்வரி மற்றும் குடும்பத்தினர்

# NINTH YEAR REMEMBRANCE

*"Well done good and faithful servant. You have been faithful in little now I will make you masters over many Enter into the joy of your Lord" (Matt 25:21)*



**Born**
**06.11.1940**

**Died**
**21.03.2014**

# VIMALA MIRANDA

**(W/o. Late. Rosary Miranda)**

*Life is but a stopping place....*
*A pause in what's to be,*
*A resting place along the road,*
*To sweet eternity.*
*We all have different journey,*
*Different paths along the way.*
*We all were meant to learn some things,*
*But never meant to stay...*
*Our destination is a place,*
*Far greater than we know...*

*Fondly Remembered By*

**FAMILY & FRIENDS**

No.11/6, State Bank of India Staff 1st Colony, Bye Pass Road, Madurai - 625 016.

விண்ணக வாழ்வின்

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

12.03.2023



பிறப்பு
20.10.1950

இறப்பு
12.03.2021

# A. அருள்சீலி பர்னாந்து

வயது : 71

"என்மேல் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்."

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மகன் : A. ஜாய்சன்
மருமகள் : J. பமிலா
பேத்தி : J. ரேச்சல்

மற்றும்
குடும்பத்தினர்

SHINY Ph : 98421 31493